வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். RCOP 1/2021

வழக்கு சாட்சி RW1

| பெயர் | ஹேமலதா | ஜாதி | |
|---|---|---|---|
| கணவர்/தந்தை | மோகன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 44 |

தேதி 25.04.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

எனது தரப்பு கூடுதல் பிரமாண வாக்குமூலத்தினை எழுத்து மூலமாக இங்கு தாக்கல் செய்கிறேன் அதனை ஒரு பாகமாக ஏற்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனது தரப்பிற்கு ஆதரவாக 15.02.2009 பதில் அறிவிப்பு அசல் எ.சா.ஆ.2 ஆகவும், 14.12.2017 வழக்கறிஞர் அறிவிப்பு அசல் எ.சா.ஆ.3 ஆகவும், 01.01.2018 பதில் அறிவிப்பு அஞ்சலக ஒப்புகை அட்டையுடன் அலுவலக நகல் எ.சா.ஆ.4 ஆகவும், 06.04.2022 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக அசல் எ.சா.ஆ.5 ஆகவும், 10.05.2022 பதில் அறிவிப்பு அஞ்சலக ஒப்புகை அட்டையுடன் அலுவலக நகல் எ.சா.ஆ.6 ஆகவும், ( மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை பொறுத்து எதிர் உறையில் தெரிவிக்காததால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று ஆட்சேபணையானது தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபணையை பொறுத்து அசல் மனுவில் முடிவில் தீர்மானம் செய்துகொள்வது என்று மேற்படி எ.சா.ஆ.2 முத்ல் எ.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் மனுதாரர் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 10.12.2009 மாத்தூர் ஊராட்சியால் அளிக்கப்பட்ட சான்று எ.சா.ஆ.7 ஆகவும், 08.03.2022 சென்னை மாநகராட்சியால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலம் பெறப்பட்ட சான்று எ.சா.ஆ.8 ஆகவும், மாதவரம் மாநகராட்சி நிலஅளவை வரைபடம் நகல் எ.சா.ஆ.9 ஆகவும், மாத்தூர் மாநகராட்சி நிலஅளவை வரைபடம் நகல் எ.சா.ஆ.10 ஆகவும் ( எ.சா.ஆ.9, எ.சா.ஆ.10 நகல் என்பதால் மனுதாரர் தரப்பில் ஆட்சேபயானது தெரிவிக்ப்பட்டு ஆட்சேபணையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது). குறியீடு செய்யப்படுகிறது. மனுதாரர் மனுவினை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

நான் பல் மருத்துவமனை எத்தனை இடங்களில் வைத்துள்ளேன் என்றால் மூன்று இடங்களில் வைத்துள்ளேன். மனு சொத்தின் உரிமையாளர் யார் என்றால் அமுதவள்ளி. அமுதவள்ளி கணவர் சுகுமாறன் இவ்வழக்கின் தரப்பினராக சேர்ந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து இரண்டு சர்வே நம்பர்கள் உள்ள சொத்து என்றால் ஆமாம். எ.சா.ஆ.7 ஆவணமானது ஏற்கெனவே 2009ல் நான் சாட்சியம் அளிக்கும்போது ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் முன்னர் வழக்கறிஞர் அவரிடம் அளித்திருந்தேன். அவர் தாக்கல் செய்யாமல் விடுபட்டுள்ளார். நான் வழக்கிற்காக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.9 மாதவரம் முனிசிபாலிட்டி என உள்ளது என்றால் ஆமாம். எ.சா.ஆ.9 மூலமாக மனு சொத்தானது மாதவரம் முனிசிபாலிட்டிக்கு கட்டுப்பட்டது என்றால் நாங்கள் அவ்வாறு சொல்லவில்லை. எ.சா.ஆ.8 மாத்தூர், மாதவரம் கிராமத்திற்காக கேட்கப்பட்டதா என்றால் மனு சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்பதினை தெரிந்து கொள்ளுவதற்காக கேட்கப்பட்டது. மனுதாரர் என்னை மிரட்டியதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் அளித்தேன். புகார் அளித்தற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியவில்லை. மனுதாரர் தன்னை நான் போலீசார் மூலம் மிரட்டக்கூடாது என மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு எண். 2639/2023 மனு தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மனு சொத்து மாதவரம் முனிசிலிபாலிட்டிக்கு கட்டுப்பட்ட சொத்து என்பதால் இம்மனுவினை விசாரணை செய்வதற்கு இந்த நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது என்றால் சரியல்ல. மனு சொத்தானது தற்போது இடிந்து விழும் நிலையில் உள்ளது என்றால் மனுதாரர்தான் மனு சொத்தை இடித்து சேதப்படுத்தினார். நான் அவ்வாறு இடித்து இருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்து அதனை ஆவணமாக தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு நடக்காததால்தான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு சொத்து இடிந்து விழுந்து எவருக்கேனும் சேதம் ஏற்பட்டால் நான்தான் பொறுப்பு என்றால் சரியல்ல. மனுதாரர் பொறுப்பு அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.